# Project Madurai

மதுரை தமிழ் இலக்கிய
மின்தொகுப்புத் திட்டம்

* * *

# இரங்கேச வெண்பா

***

irangkEca veNpA

(in tamil script, TSCII format)

* * *

Etext in Tamil Script - TSCII format (v. 1.7)
Our Sincere thanks go to Etext preparation: Dr. Naga Ganesan, Houston, Texas, USA
Proof-reading: Mr. Sriram, Indianapolis, IN, USA
Etext preparationin pdf, html versions :  Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland

This pdf file is based on TSCInaimathi font embedded in the file. Hence this file can be viewed and printed on all computer platforms: Windows, Macintosh and Unix without the need to have the font installed in your computer.

© Project Madurai 2006
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

# இரங்கேச வெண்பா

## 1. அறத்துப்பால்

### 1.1 பாயிர இயல்

#### கடவுள் வாழ்த்து

சொன்னகம்பத் தேமடங்கல் தோன்றுதலால் அன்பரு
இன்னமுத மாகும் இரங்கேசா - மன்னுமளத்து
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு. 1

#### வான் சிறப்பு

கெண்டலுறை யூர்க்கச்சிக் கோநகரின் செய்குணத்தால்
எண்டிசையும் போற்றும் இரங்கேசா - மண்டிக்
கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 2

கொண்டல் - மேகம், சார்வாய் - அநுகூலமாய்.

#### நீத்தார் பெருமை

மன்னன்மக முங்காதி மைந்தன் தனையடைந்தோன்
இன்னுயிருங் காத்தான் இரங்கேசா - சொன்னால்
உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து. 3
மகம் - யாகம், காதிமைந்தன் - விசுவாமித்திரன்.

#### அறன்வலி யுரைத்தல்

கானக் குரங்கெழலாற் கங்கை சுதன் முதலோர்
ஈனப் படலால் இரங்கேசா - ஆன
அறத்தினூஉங்கு ஆக்கமு மில்லை யதனை
மறத்திலின் ஊங்கில்லை கேடு. 4

எழலால் - வினங்கினதாலும், கங்கைசுதன் - கங்காதேவியின் புத்திரன்,
ஆக்கம் - நன்மை

### 1.2 இல்லற இயல்

#### இல்வாழ்க்கை

பத்துடனான் கில்லம் பரகதிகொண் டேகினான்
இத்தலமேல் ஆள்வான் இரங்கேசா - நித்தம்
இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை. 5

இத்தலமேலாள்வான் - கஞ்சனூர் ழ்வார், இயல்பினான் - முறைப்படி.

## வாழ்க்கைத் துணைநலம்

மாண்டவியார் சாபத்தை வல்லிளுளால் மாற்றினான்
ஈண்டோர் மடந்தை இரங்கேசா - நீண்டபுகழ்ப்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின். 6
திண்மை - கலங்காநிலைமை.

## புதல்வரைப் பெறுதல்

வேதம் புகழ்நதியை மேதினியில் தந்துகுலந்து
ஏதுங் கெடுத்தான் இரங்கேசா - ஓதும்
எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். 7

வேதம்புகழ் நதி - காயகங்கை, பழிபிறங்கா - பழிக்கு ஆளாகாத.

## அன்புடைமை

வெற்பின் சிறகரிய செந்நென் பளித்துமுனி
இப்புவியைக் காத்தான் இரங்கேசா - நற்புகழாம்
அன்பிலா ரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 8
முனி - ததீசிமுனிவர்.

## விருந்தோம்பல்

தேசுபெறு மாறன் தெளித்த முளையமுதிட்டு
ஈசனுடன் போந்தான் இரங்கேசா - பேசுங்கால்
செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 9

மாறன் - இளையான்குடிமாற நாயனார், முளை - அன்றுவிதைத்த நென்முளை

## இனியவை கூறல்

வன்சமர்நட் பால்வென்று மாநிறமா ளத்தருமன்
இன்சொல்லாற் பெற்றான் இரங்கேசா - பொன்செய்
நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல். 10

வான்சமர் - பாரதப்போர், பண்பின் தலைப்பிரியாத - அறத்திினின்று வழுவாத,
நயன் - இலாபம்

## செய்ந்நன்றி அறிதல்

நாடிச் சிறைக்கருடன் நாகக் கொடுங்கணையை
ஈடழித்தான் அன்றோ இரங்கேசா - நடுங்கால்

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 11

சிறைக்கருடன் - சிறகுகளையுடைய கருடன்,
ஈடழித்தான் -சின்னாபின்னப்படுத்தினான்

## நடுவு நிலைமை

வேதவிதி வீமா விலங்கிற்கு உடற்பாதி
ஈதல்அழ கென்றான் இரங்கேசா - ஒதுங்கால்
நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 12

விலங்கு - புருஷாமிருகம், நடுவிகந்தாம் ஆக்கம் - நீதிதவறியதால் வரும் செல்வம்.

## அடக்க முடைமை

ஆன்ற சபையில் அடங்காச் சிசுபாலன்
ஏன்றிரந்தான் அன்றோ இரங்கேசா - சான்றோர்கள்
காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை யுயிர்க்கு. 13

ஆன்றசபை - பெரியோர்கள் சபை, ஏன்று - தண்டனையடைந்து,
ஊங்கில்லை - சிறந்ததில்லை.

## ஒழுக்கமுடைமை

வேடவான் மீகர்பின்பு வேதியரின் மேலானார்
ஏடவிழ்தார் சூடும் இரங்கேசா - நாடில்
ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 14

ஏடவிழ் - இதழ் விரிந்த, குடிமை - உயர்குடிப் பிறப்பு.

## பிறனில் விழையாமை

அம்பிகையை நோக்கி யளகேசன் கண்ணிழந்தான்
இம்பர் பரவும் இரங்கேசா - நம்பிப்
பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனென்றோ ஆன்ற வொழுக்கு. 15

அம்பிகை - பார்வதி, அளகேசன் - குபேரன், இம்பர் - இவ்வுலகோர்.

## பொறையுடைமை

முந்து மரந்தரித்த மூர்க்கன்சொற் கேட்டுமவன்
எந்தைபிரான் என்றான் இரங்கேசா - கொந்தி
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 16

முந்தும் - எதிரிலுள்ள, அகழ்வார் - தோண்டுகின்றவர்.

### அழுக்காறாமை

வெள்ளி கொடுத்தல் விலக்கிவிழி தோற்றுலகில்
எள்ளலுற்றான் அன்றோ இரங்கேசா - உள்ளத்து
அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியுங் கேடீன் பது. 17

வெள்ளி - சுக்கிரன், ஒன்னார் - பகைவர், ஈன்பது - தருவது.

### வெ•காமை

முன்னோனைப் போரின் முடுக்கி விமானத்தை
என்னோகைக் கொண்டான் இரங்கேசா - அன்னோ
நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். 18

முன்னோன் - குபேரன், முடுக்கி - வென்று, பொன்றல் - கெடுதல்.

### புறங்கூறாமை

தக்கதுரி யோதனன்பாற் சார்ந்த சகுனியைப்போல்
இக்கு வலயத்தில் இரங்கேசா - மிக்குப்
பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 19

பகச்சொல்லி - புறங்கூறி, தேற்றாதவர் - அறியாதவர்.

### பயனில சொல்லாமை

வேந்தை வதிட்டன் வியத்தல்பழு தென்றமுனி
ஏந்துதவந் தோற்றான் இரங்கேசா - ஆய்ந்தக்கால்
சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். 20

வேந்து - அரிச்சந்திரன், முனி - விசுவாமித்திரன்,
ஏந்துதவம் - நோற்ற நோன்மை, நீர்மை - பெருந்தன்மை.

### தீவினை அச்சம்

காளமுனி பாண்டவர்மேல் ஏவுங் கடிவிழுங்க
ஏளிதம் ஆனான் இரங்கேசா - நாளுந்தான்
தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 21
கடி - பூதம், பயத்தல் - விளைவித்தல்.

### ஒப்புரவறிதல்

அந்தணர் மேன்மை அறியாமற் சர்ப்பவென்ற
இந்திரன்பாம் பானான் இரங்கேசா - முந்தவே
ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக் கோட்டக்க துடைத்து. 22

சர்ப்ப - விரைந்துசொல்லுங்கள் என்னும் பொருளைத்தரும் சொல்,
இந்திரன் - நகுஷமகாராஜன், ஒப்புரவு - உலகநடையறிந்து செய்யுங் காரியம்.

### ஈகை

அங்கியுங் குண்டலமும் ஆகண் டலர்க்களித்தான்
இங்கிதமாக் கன்னன் இரங்கேசா - மங்கியே
சாதலின் இன்னாத தில்லை இனிதாதூஉம்
ஈதல் இயையாக் கடை. 23

கண்டலன் - தேவேந்திரன், இயையாக்கடை - இசையாத போது.

### புகழ்

மும்மை யுலகும் முசுகுந் தனுத்துதிக்கும்
எம்மையாட் கொண்ட இரங்கேசா - செம்மையாத்
தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 24

தோன்றல் - பிறத்தல்.

## 1.3 துறவற இயல்

### அருளுடைமை

வஞ்சப் புறவினுடன் வான்துலையில் ஏறினான்
இன்சொற் சிவிமுன் இரங்கேசா - எஞ்சாமல்
மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. 25

வான்துலை - நீண்ட தராசு, சிவி - சிபிச்சக்கரவர்த்தி

### புலான் மறுத்தல்

அந்தணனைக் கன்மாட பாதன் அருந்தினான்
இந்த வுலகத்து இரங்கேசா - வந்த
பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
ஶ்ரீங்கில்லை ஊன்தின் பவர்க்கு. 26

கன்மாடபாதன்- கன்மாடபாதன் என்னும் அரசன், போற்றாதார் - காப்பாற்றாதவர்.

## தவம்

வேந்தந் தணர்குலத்து மேலா கியதகைமை
ஏந்துவத் தேய்ந்தான் இரங்கேசா - மாந்தர்க்கு
வேண்டிய வேண்டியாங்கு எய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 27

ஈண்டு - இந்நிலவுலகில்

## கூடா வொழுக்கம்

சந்யாசி யாய்விஜயன் தார்குழலைக் கொண்டகன்றான்
இந்நா னிலம்போற்றும் இரங்கேசா - சொன்னால்
வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியிந்தோல் போர்த்துமேய்ந் தற்று. 28

தார்குழல் - சுபத்திரை, வல்லுருவம் - பொய்வேடம்.

## கள்ளாமை

உத்தங்கன் ஓலை யொளித்தநா கக்குலங்கள்
இற்ற புகையால் இரங்கேசா - மற்றுலகில்
உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வேம் எனல். 29

ஓலை - காதோலை, நாகக்குலங்கள் - தஷகனென்னும் நாகக் கூட்டங்கள்,
இற்ற - மடிந்தன, கள்வேம் - திருடுவோம்.

## வாய்மை

மூவாரிச் சந்திரற்கு முன்னின்ற காட்சிபோல்
ஏவர்பெற் றார்மேனாள் இரங்கேசா - பூவில்
மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை. 30

மனத்தொடு - திரிகரணசுத்தியாக.

## வெகுளாமை

தாக்கி நிமிவதிட்டர் சாபத்தால் தம்முடல்விட்டு
ஏக்கமுற்றார் அன்றோ இரங்கேசா - நோக்கினால்
செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனில் தீய பிற. 31

நிமிவதிட்டர் - நிமிச்சக்கரவர்த்தியும் வசிட்டமுனிவரும்.

## இன்னா செய்யாமை

பாந்தாள் முனிமேற் படுத்தபரிச் சித்தன்றான்
ஏந்துதுன்பம் உற்றன் இரங்கேசா - மாந்தர்

பிறர்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 32

பாந்தள் - பாம்பு, படுத்த - போட்டதனால்.

## சொல்லாமை

சொல்லார் முனிக்கிறுதி சூழ்கார்த்த வீரன்குலம்
எல்லாம் இறந்தது இரங்கேசா - கொல்லவே
தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. 33

சொல்லார்முனி - புகழ்பெற்ற ஜமதக்கினிமுனிவர்.

## நிலையாமை

அட்டகோ ணத்தனுடல் அத்திரமென் றான்திசைகள்
எட்டும் பரவும் இரங்கேசா - மட்டினால்
நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. 34

அட்டகோணத்தன் - அட்டகோண மகரிஷி,
அத்திரம் - நிலையற்றது, கடை - இழிவு.

## துறவு

பீடுபெறு பட்டினத்தப் பிள்ளையைப்போ லேதுறவார்க்கு
ஈடு தருமோ இரங்கேசா - நீடுலகில்
யானெனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த வுலகம் புகும். 35

ஈடு - பலன், செருக்கு - அகங்காரம்.

## மெய்யுணர்தல்

கர்ப்பத்தி லேசுகனார் கேடில்பொரு ளைக்குறித்தார்
இப்புதுமைக் கன்பாம் இரங்கேசா - உற்பத்தி
ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயனின்றே
மெய்யுணர் வில்லாதவர்க்கு. 36

கேடில்பொருள் - அழியாப்பொருள், மெய்யுணர்வு - உண்மையறிவு.

## அவா அறுத்தல்

தேசஞ்சொல் பத்ரகிரி சிந்தையின்மூ வாசைவிட்டான்
ஈசன் பரவும் இரங்கேசா - பாச
அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ற்றான் வரும். 37

தேசஞ்சொல் - தேயத்தார்புகழும், ஆற்ற - முற்றும்,

தவாவினை - நல்வினை.

### ஊழ்

சிந்துபதி தந்தையொடு தேர்சிசய னாலிறந்தான்
இந்துதவழ் இஞ்சி இரங்கேசா - முந்திவரும்
ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். 38

சிந்துபதி - சயிந்தவன், தேர்விசயன் - அருச்சுனன்,
இஞ்சி - மதில், ஊழ் - விதி.

------------

# 2. பொருட்பால்

## 2.1 அரசியல்

### இறைமாட்சி

ஒன்றி மறித்தான் உரோணிசக டைச்சௌரி
என்றும் புகாமல் இரங்கேசா - நன்று
முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும். 39

ஒன்றி - சென்று, சௌரி - சனிபகவான், முறை - செங்கோல், இறை - கடவுள்

### கல்வி

மல்லல் வியாகரண மாருதிகற் கக்கருதி
எல்லவன்பின் போந்தான் இரங்கேசா - நல்ல
ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து. 40

மல்லல் - பெரிய, எல்லவன் - சூரியன், ஒருமை - ஒரே பிறப்பு

### கல்லாமை

ஞானசம் பந்தருடன் நன்றாய்ச் சமணரெதிர்த்து
ஈனமுற்றார் அன்றோ இரங்கேசா - ஆன
அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். 41

கோட்டிக்கொளல் - சபையிற்பேசுதல், ஆன அரங்கு - தகுதியான வகுப்பிடம்

### கேள்வி

பாகவதங் கேட்டுப் பதிச்சித்தன் முத்திபெற்றான்
ஏக வுருவாம் இரங்கேசா - சோக
இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல். 42

இழுக்கல் - வழுக்குதல்.

## அறிவுடைமை

சீதரனைப் பார்த்தனன்று சேர்ந்தான் அரவுயர்த்தோன்
யாதவரைச் சேர்ந்தான் இரங்கேசா - ஒதில்
அறியுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர். 43

சீதரன் - கண்ணன், அரவுயர்ந்தோன் - துரியோதனன்
அறிகல்லாதவர் - அறியமாட்டாதவர்.

## குற்றங் கடிதல்

கையரிந்தான் மாறன் கதடிவித்த குற்றத்தால்
எய்யுஞ் சிலைக்கை இரங்கேசா - பையத்
தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 44

மாறன் - பாண்டியன்

## பெரியாரைத் துணைக்கோடல்

யோகமுனி ராகவனை யுற்றரக்கர் போர்களைந்தே
யாகம் முடித்தான் இரங்கேசா - ஆகையால்
தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். 45

யோகமுனி - விசுவாமித்திரர், தக்கார் - மேலோர், செற்றார் - பகைவர்.

## சிற்றினஞ் சேராமை

துன்னு சகுனிகன்னன் சொற்கேட்டு அரவுயர்த்தோன்
என்னபயன் பெற்றான் இரங்கேசா - மன்னிய
சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். 46

சிற்றினம் - அற்பர் உறவு

## தெரிந்து செயல்வகை

விடமணன் வன்மம் விளம்ப இலங்கைநகர்
ஈடழிந்த தன்றோ இரங்கேசா - கூடத்
தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வவார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல். 47

வீடணன் - விபீடணன், ஈடு - பெருமை, அரும்பொருள் - செய்வதற்கரிய பொருள்.

## வலி அறிதல்

பைதல் எனக்கருதிப் பார்க்கவரா மன்சிலையொடு
எய்துவந் தோற்றான் இரங்கேசா - வையத்து
உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முறிந்தார் பலர். 48
பைதல் - சிறுபையன், ஊக்கி - போர்செய்து,
இடைக்கண் முறிந்தார் - இடையில் தோற்றார்.

## காலம் அறிதல்

ஆண்டு பதின்மூன்று அரவுயர்த்தோன் செய்தவெல்லாம்
ஈண்டுபொறுத் தாண்டான் இரங்கேசா - வேண்டிய
காலங்கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர். 49

கலங்காது - தவறாது, ஈண்டு - இவ்வுலகம்.

## இடனறிதல்

சார்ந்துபறை கீறிச் சாரசந்தன் தன்னுடலை
ஈர்ந்துவென்றான் வீமன் இரங்கேசா - தேர்ந்தக்கால்
எண்ணியார் எண்ணம் இழப்பார் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின். 50

சார்ந்து - சென்று, பறை - பேரிகை, இடன் - தகுதி

## தெரிந்து தெளிதல்

கன்னன் தெளிந்தாசான் காதலனை ஐயமுற்றான்
இன்னாற் பொலிந்தான் இரங்கேசா - முன்னமே
தேரான் தெளிபுந் தெளிந்தான்கண் ஐயுறவுந்
தீரா இடும்பை தரும். 51

சான்காதலன் - அசுவத்தாமன், இடும்பை - துன்பம்.

## தெரிந்து விளையாடல்

சல்லியனைத் தேருக்குச் சாரதியாய்க் கொண்டதனால்
எல்லாவன்சேய் தோற்றான் இரங்கேசா - சொல்லில்
இதனை யிதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். 52

எல்லவன் - கன்னன்.

## சுற்றந்தழால்

வில்லுக் கதிபன் விரகினால் ஐவரர்க்கு
இல்லுற்று உய்ந்தார் இரங்கேசா - நல்ல
விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா

ஆக்கம் பலவுந் தரும். 53
வில்லுக்கதிபன் - விதுரன், விரகு - முன்புத்தி.

## பொச்சாவாமை

தண்ணார் சடைமுடியைத் தக்கனிழந் தானரனை
எண்ணாமல் அன்றோ இரங்கேசா - மண்ணோர்
இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. 54
தண்ணார் - குளிர்ச்சி பொருந்திய, மைந்துறுதல் - இறுமாந்திருத்தல்.

## செங்கோன்மை

கண்கொண்டான் பொன்னிக் கரைகட்ட வாரானை
எண்கொண்ட சோழன் இரங்கேசா - மண்கொண்ட
வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின். 55

வாரானை - வாராத பிரதாபருத்திரனை, பொன்னிக்கரை - கங்கைக்கரை.

## கொடுங்கோன்மை

தன்று புவிக்கிடும்பை சூழ்ந்து புரவேந்தர்
இன்றி யெறிந்தார் இரங்கேசா - கன்றியே
அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 56

தேய்க்கும்படை - குறைக்கும்வாள், கன்றி - மன்நொந்து.

## வெருவந்த செய்யாமை

தாடகைதன் மைந்தர் தவமுனியை அச்சுறுத்தி
ஈடரக்க ரானார் இரங்கேசா - நாடி
வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். 57

வெருவந்த - அஞ்சும்படியான, ஒருவந்தம் - நிச்சயமாக.

## கண்ணோட்டம்

சொல்லுகவென் றங்கதனைத் தூதேவி மாதைவிடல்
இல்லையவன் என்றான் இரங்கேசா - மெல்ல
ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. 58

ஒறுத்தாற்றல் - தண்டஞ் செய்தல்.

## ஒற்றாடல்

மேகநா தன்செய்த வேள்விதனை ஒற்றினால்
ஏகியழித் துய்ந்தார் இரங்கேசா - சேகரித்த
ஒற்றினால் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில். 59

மேகநாதன் - இந்திரஜித்தன், ஒற்றினால் - ஏவலால்.

## ஊக்கமுடைமை

வீசு புகழ்விசயன் விற்றமும்பு சென்னியின் மேல்
ஈசன் தரித்தான் இரங்கேசா - ஆசையால்
ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையான் உழை. 60

அதர்வினாய் - வழிகேட்டுக்கொண்டு, உடையானுழை - உடையானிடம்.

## மடியின்மை

துஞ்சுவிழிக் கும்பகன்னன் துண்டஞ் செவியிழந்தும்
எஞ்சுதலை யுற்றான் இரங்கேசா - விஞ்சும்
மடிமை குடிமைக்கண் தங்கிற்றன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும். 61

துண்டம் - மூக்கு, மடிமை - சோம்பல்

## ஆள்வினை யுடைமை

செய்துசிவ பூசை சிரஞ்சீவி ஆமபயம்
எய்தினன்மார்க் கண்டன் இரங்கேசா - நொய்தாக
ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர். 62

நொய்தாக - அற்பமாக, உஞற்றுபவர் - முயற்சிசெய்வபர்.

## இடுக்கண் அழியாமை

விற்று மனையாளை வெட்டுதலும் உற்றதுயர்
இற்றது மன்னற்கு இரங்கேசா - அற்றுலகில்
இன்னாமை இன்பம் எனக்கொளின் குந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு. 63

இற்றது - நீங்கிற்று, ஒன்னார் - பகைவர்.

## 2.2 அமைச்சியல்

### அமைச்சு

மானவன்மால் தேவர் வனசரராம் மாதைவிடாய்
ஈனமுறும் என்றான் இரங்கேசா - ஞானத்து
அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன். 64
மானவன் - இராமன், அறிகொன்று - சொன்ன நன்மையையும் அழித்து

### சொல்வன்மை

சோழன் சிவாற்பரச்சொல் தோற்றமைதான் இந்தவுலகு
எழும் அறிந்த இரங்கேசா - தாழாமல்
சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து. 65

சோழன் - கிருமிகண்ட சோழன்.

### வினைத் தூய்மை

தன்மகிணன் தோற்றாள் தாணிமுழு தூங்கைகை
என்மகற்கு நல்கொன்று இரங்கேசா - நன்மை
கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். 66

மகிணன் - கணவன், ஒருவுதல் - நீக்குதல், பீழை - துன்பம்.

### வினைத்திட்பம்

ஆர்க்குங் கடல்நீர் அருந்த வொருகரத்தில்
ஏற்க அடங்கிற்று இரங்கேசா - பார்க்கும்
உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி யன்னார் உடைத்து. 67

ஆர்க்கும் - ஒலிக்கின்ற, எள்ளாமை - இகழாமை.

### வினை செயல்வகை

தொட்ட தெரிப்போன் சுடர்முடிமேல் அங்கைவைப்பித்
திட்டவனைச் செற்றாய் இரங்கேசா - முட்ட
வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. 68

### தூது

அக்கன் முதலரக்கர் ஆவிதனை வாங்கியூர்
எக்கியனுக்கு ஈந்தான் இரங்கேசா - மிக்க
இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாந் தூது. 69

அக்கன் - அஷகுமாரன்.

### மன்னரைச் சேர்ந்தொழுகல்

அஷன் நிதியோற்கு அபசாரஞ் செய்ததனால்
எஷன் பிரிந்தான் இரங்கேசா - பஷம்
பழையம் எனக்கருதி பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும். 70

அஷன் - இயக்கன்.

### குறிப்பறிதல்

பார்வைகண் டிராமன் பரன்வில் ஒடித்தணங்கை
ஏர்வையாக் கொண்டான் இரங்கேசா - நீர்மைபொடும்
ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். 71

பரன் - சிவன், ஏர்வை - மனைவி.

### அவை அறிதல்

தேவர் குழாத்தினிடைத் தென்பால் அகத்தியனை
ஏவினிகர் என்றான் இரங்கேசா - பூவில்
அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 72

தொகை - பொருள்.

### அவை அஞ்சாமை

ஆன்றசங்கர் போற்றவொன்றை ஐயிரண்டா மானிலத்தார்க்கு
ஈன்றவரிற் சொன்னார் இரங்கேசா - தோன்றவே
சுற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார் முன்
கற்ற செலச்சொல்லுவார். 73

செலச்சொல்லுவார் - எளிதில் அறியும் வண்ணம் சொல்லுவார்.

## 2.3 அங்க இயல்

### நாடு

சீரிதாம் எண்ணமுற்ற தேசத்தில் தென்திருக்கா
வேரிசூழ் சோணாடு இரங்கேசா - ஆரப்
பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு. 74

ஆர - நிறைந்திருப்பதனால், பெட்டக்கது - விரும்பத்தக்கது, ஆற்ற - மிக.

### அரண்

சிந்துவிடை யேழுமதில் சேர்ந்த இலங்கைநகர்
எந்தவகை போயது இரங்கேசா - முந்தும்
எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்க்கண் நில்லா தரண். 75

சிந்து - சமுத்திரம்.

### பொருள் செயல்வகை

நட்டுவனாம் பற்குணன்றான் நாடாளக் கண்டுதிசை
எட்டும் பணிந்தது இரங்கேசா - கிட்டுபொருள்
இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு. 76

### படை மாட்சி

மொய்கொள் கடல்போலும் மூல பலமடிய
எய்துவென்ற தோர்வில் இரங்கேசா - வையத்து
ஒலித்தக்கால் என்னாம் உவரி யெலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். 77

மொய்கொள் - நெருங்கிய, உவரி - திரண்டு.

### படைச் செருக்கு

மார்பத்து அழுந்துகணை வாங்கிவிடுத் தான்கரங்கள்
சர்பத்தன் மைந்தன் இரங்கேசா - ஆர்வத்தால்
கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். 78

மெய்வேல் - மார்பில் தைத்திருந்த வேலாயுதம்

### நட்பு

வாசவன் தஷன் மகம்புகா வாறுற்றான்
ஈசன் அயன்போற்றும் இரங்கேசா - நேசன்
அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு. 79

மகம் - யாகம், ஆறு - நன்னெறி

### நட்பாராய்தல்

தேசுபெறு மார்த்தாண்டன் செல்வன்முடி சூடியிலங்
கேசனை வென்றான் இரங்கேசா - மாசில்
குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டும் நட்பு. 80

மார்த்தாண்டன் - சூரியன்.

## பழைமை

தானவர் வேந்தைச் சடாயு பொருதிறந்தான்
என உருவாம் இரங்கேசா - மாநிலத்தில்
எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. 81

தானவர் - அரக்கர், எல்லைக்கண் - நட்பின் வரம்பு.

## நட்பு

மாயமா ரீசன் மடிந்தோன் கவுசிகன்றான்
ஏயதவ முற்றான் இரங்கேசா - யதனால்
பேதை பெருங்கெழீ நட்பின் அறிவுடையார்
எதின்மை கோடி யுறும். 82

ஏதின்மை - பகைமை, கெழீஇ - நெருங்கிய.

## கூடாநட்பு

சார்ந்துதிதி கர்ப்பஞ் சதகிருதேழ் கண்டமா
ஈர்ந்தனன் அன்றோ இரங்கேசா - சேர்ந்தார்போல்
சொல் வணக்கம் ஒன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான். 83

ஒன்னார் - பகைவர், சதகிருது - தேவேந்திரன்

## பேதைமை

மாதாபி தாவை மதியாத லேசிறையில்
ஏதாக வைத்தான் இரங்கேசா - மேதினியில்
ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. 84

ஆர - அனுபவிக்க, தமர் - சுற்றத்தார்.

## புல்லறிவாண்மை

தாதை சிலையொடிப்பத் தான்மொழிந்தான் தீதாக
ஈதடையார் செய்யார் இரங்கேசா - ஒதில்
அறிவிலார் தாந் தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்தல் அரிது. 85

பீழை - வருத்தம்.

## இகல்

சென்ன நிறத்தான் சுதனே அரும்பகையாய்
இன்னுயிரைக் கொன்றான் இரங்கேசா - மன்னும்
இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணுங் கேடு தரற்கு. 86

சொன்ன நிறத்தான் - இரணியன், இகல் - பகைமை.

## பகைமாட்சி

சித்திரசே னன்கையிற் சிக்கினான் மன்னவர்மன்
இத்தரணி போற்றும் இரங்கேசா - சுத்த
வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது. 87

மன்னவர்மன் - துரியோதனன், பண்பு - குணம்.

## பகைத்திறந் தெரிதல்

தெவ்வை இளந்தையென்று செப்பியே விக்கிரமன்
எவ்வமிக வுற்றான் இரங்கேசா - வவ்வி
இளைதாக முண்மரங் கொல்க களையுர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. 88

தெவ்வை - பகைவனாகிய சாலிவாகனனை, காழ்த்தல் - முதிர்தல்.

## உட்பகை

இவ்வுலகை ஆளாது இராமனைக்கான் போக்கினான்
எவ்வமனக் கூனி இரங்கேசா - அவ்வியஞ்சேர்
எட்பகவு அன்ன சிறுமைத்தே யினும்
உட்பகை யுள்ளதாங் கேடு. 89

எவ்வம் - குற்றம், எட்பகவு - எள்ளின் பிளவு.

## பெரியாரைப் பிழையாமை

சொல்வல் லகத்தியார்க்குச் சூழ்ச்சிசெய்த வாதாவி
இல்லவனும் மாய்ந்தார் இரங்கேசா - மல்வல்ல
கூற்றத்தை கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்
காற்றாதார் இன்னா செயல். 90
மல்வல்ல - வருத்தவல்ல.

## பெண்வழிச் சேரல்

சந்தநுவேந் தேமு தனையர் உயிரிழந்தான்
இந்துநுதற் கங்கை இரங்கேசா - அந்தோ
மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது. 91

இந்து - சந்திரன்.

### வரைவின் மகளிர்

தொண்ட ரடிப்பொடியைத் தோளிறுக வீக்குதலால்
எண்டிசையும் போற்றும் இரங்கேசா - கண்டிருந்தும்
தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். 92

வீக்குதல் - கட்டுதல், தகை செருக்கி - ஆடல் பாடல் என்பவைகளால் இறுமாந்து.

### கள்ளுண்ணாமை

தக்கரு மைந்தனென்பு சார்ந்தமது வுண்டசுங்கன்
எக்கருமஞ் செய்தான் இரங்கேசா - மிக்க
களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும். 93

சுங்கன் - சுக்கிரபகவான்.

### சூது

தன்மர் துரியோ தன்னுடன் சூதாடி
இன்மையுற்றார் அன்றோ இரங்கேசா - நன்மைப்
பொருள்கொடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கொடுத்து
அல்லல் உழப்பிக்குஞ் சூது. 94

தன்மர் - தருமராஜர், உழப்பிக்கும் - விளைவிக்கும்.

### மருந்து

அம்பருடன் வேள்விநுகர்ந் தக்கினிக்கு மந்தமுற்ற
தென்ப தறிந்தும் இரங்கேசா - தன்பசியின்
தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். 95

படும் - உண்டாகும்.

## 2.4 ஒழிபியல்

### குடிமை

தூடணமாம் ஐவருடன் துன்னுதலென் றேகன்னன்
ஈடனையை நீத்தான் இரங்கேசா - நீட
அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 96

### மானம்

ஆகங் குறைந்துருவே றானான்இல் லாளைவிடுத்
தேகிநள வேந்தன் இரங்கேசா - கையினால்
குன்றின் அனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். 97

### பெருமை

மண்பரவு சக்கரத்தை மாலெடுப்ப வீட்டுமனார்
எண்புகழாக் கொண்டார் இரங்கேசா - பண்பாற்
பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல். 98

மண்பரவு - உலகம் புகழும்.

### சான்றாண்மை

புத்தனெறி கற்கும் புராரி பதமளித்தான்
இத்தரணி போற்றும் இரங்கேசா - மெத்தவே
இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 99

சால்பு - சான்றாண்மை

### பண்புடைமை

துன்பமுறுந் தங்கையெனச் சொல்லி யுதிட்டிரனார்
இன்பமுற்றார் அன்றோ இரங்கேசா - அன்பின்
நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. 100

பாடறிதல் - பிறரியல்பு அறிந்து நடத்தல்.

### நன்றியில் செல்வம்

செப்பும் இருநிதிகள் சேர்ந்துங் குபேரனுக்கு
எப்பொருளால் என்னாம் இரங்கேசா - கைப்பொருள்
அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று. 101

ஆற்றாதான் - கொடாதவன், தமியன் - தனியன்.

### நாணுடைமை

வாவி புகுந்த மகிபன் தனதுயிரை
ஈவதற்குப் போந்தான் இரங்கேசா - ஆவதனால்
நாணால் உயிரைத் துறப்பார் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர். 102

## குடிசெயல் வகை

அன்னை அடிமைக்கு அமுதுகொணர்ந் தெள்ளலுடன்
இன்னல் துடைத்தான் இரங்கேசா - உன்னுங்கால்
நல்லாண்மை யென்பது ஒருவற்குத் தான் பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல். 103

அமுது - தேவாமிர்தம்

## உழவு

வன்பா ரதத்தலங்கை வைத்தார்க் கெதிரில்லை
என்பார் அதனால் இரங்கேசா - முன்பார்
உழுவார் உலகத்தார்க் காணி யஃதாற்றாது
எழுவாரை யெல்லாம் பொறுத்து. 104

அலம் - கலப்பை, எழுவார் - வேறு தொழில் செய்பவர்.

## நல்குரவு

காவலனாம் பாஞ்சாலன் கண்டு துரோணரைநீர்
ஏவரென்றான் அன்றோ இரங்கேசா - தாவில்
அறஞ்சாரா நல்குரவு ஈன்றதாயானும்
பிறன்போல நோக்கப் படும். 105
அறஞ்சாரா - அறம் பொருந்தாத.

## இரவு

அங்கியும்பர் கோன்பா வருந்தநினைந் தர்ச்சுனன்பால்
இங்கிதமாப் பெற்றான் இரங்கேசா - மங்காது
இரத்தலும் ஈதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு. 106

அங்கி - அக்கினிபகவான், கரத்தல் - மறைத்தல், தோற்றாதார் - நினையாதவர்.

இரவச்சம்

சென்று பலிபக்கல் செங்கைவிரித் தேற்றல்பழு
தென்றுகுன்றி நின்றாய் இரங்கேசா - நன்றிதரும்
ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்கு
இரவி னிளிவந்த தில். 107

இளிவு - இழிவான செய்கை.

கயமை

தேனிருந்த சொல்லாளைத் தேர்வேந்தர் காணவுடை
ஏனுரிந்தான் மேனாள் இரங்கேசா - ஆனதனால்
நன்றிறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இவர். 108

கயவர் - இழிந்தவர், அவலம் - கவலை.
---------

# 3. காமத்துப் பால்

## 3.1 களவியல்
(ஆண்பாற் கிளவிகள்)

### தகையணங் குறுத்தல்

சுந்தர மாமகலி தோள்தோய்ந்து பத்துநூ
றிந்திரன்கண் பெற்றான் இரங்கேசா - இந்துமுறி
ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு. 109

ஞாட்பு - போர்.

### குறிப்பறிதல்

மேதை விலோசனமும் மேவும் இணைநோக்கும்
ஏது கலவிக்கும் இரங்கேசா - ஆதலால்
கண்ணோடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்னு பயனு மில. 110

மேதை விலோசனம் - குறிப்பறிவுள்ள கண்கள்.

### புணர்ச்சி மகிழ்தல்.

உம்பரிற் றுன்முகனார் உள்ளகங்கை தோள்தோய
இம்பர்வந்தார் அன்றோ இரங்கேசா - அன்பாகத்
தாம்வீழ்வார் மென்றோட் டுயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. 111

இம்பர் - இவ்வுலகம், வீழ்வார் - விரும்பும் மகளிர்.

### நலம்புனைந் துரைத்தல்

ஒண்கயற்கண் பாரதியை ஓது மறைநாவில்
எண்கண்ணன் வைத்தான் இரங்கேசா - பண்பில்
அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 112

### காதர் சிறப்புரைத்தல்

சேர்ந்து திருமகளைத் தெள்ளமுதை யும்பருக்கே
ஈந்த வுதாரம் இரங்கேசா - தேர்ந்தக்கால்
பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். 113

தெள்ளமுது - தேவர்மிர்தம், வால் வயிறு - மெண்மையான பற்கள்.

### நாணுத் துறவுரைத்தல்

சீசகன்பாஞ் சாலியின்மேல் கேவலமால் கொண்டுயிர்தோற்
றேசுதலை யுற்றான் இரங்கேசா - ஆசையெனும்
காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை. 114

அலரறிவுறுத்தல்

நீந்துகடன் முழ்கி நெடுநாட் கௌ தமனார்
ஏந்த கலி தோய்ந்தார், இரங்கேசா -மாந்தி
களித்தொறுந் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது. 115

தோய்ந்தார் - மணஞ்செய்து கொண்டார், களித்தொறும் - களிக்குந்தோறும்.

## 3.2 கற்பியல் (பெண்பாற் கிளவிகள்)

### பிரிவாற்றாமை

தன்பதியின் செல்வகையினால் தாவில்நதி யாயினாள்
என்பர் கவுசி இரங்கேசா - அன்பினாற்
செல்லாமை யுண்டேல எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. 116

செல்கை - பிரிவாற்றாமை, தாவில் - அழிவில்லாத.

### படர்மெலிந் திரங்கல்

குன்றெடுத்தான் மார்புகுடி கொண்டிருந்தாள் செங்கமலை
என்றும் பிரியாது இரங்கேசா - நன்றிகூர்
இன்பங் கடன்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. 117

செங்கமலை - திருமகள்.

### சண்விதுப் பழிதல்

காதல் அருச்சுனனைக் கண்டூர் வசியடைந்த
தேதமன்றோ மேனாள் இரங்கேசா - ஒதில்
கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து. 118

கலுழ்தல் - அழுதல்.

### பசப்புறு பருவரல்

மன்னு மகலிகல் லாய் மாநிலத்தி லேகிடந்தாள்
என்னுமொழி கேட்டாய் இரங்கேசா - துன்னப்
பசந்தாள் இரளென்ப தல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பா ரில். 119

### தனிப்படர் மிகுதி

தக்கசுவா காவைத் தருமன் விழுங்கவவள்
எக்கியனை யுண்டாள் இரங்கேசா - மிக்க
ஒருதலையான் இன்னாது காமங்காப் போல
இருதலை யானும் இனிது. 120

சுவாகா - சுவாகா வென்னுங் கன்னிகை, எக்கியன் - அக்கினி பகவான், கா - காவடி.

### நினைந்தவர் புலம்பல்

சுந்தோப சுந்தரிகல் சூழ்ந்து பொருதிறந்த
தெந்தவகை மேனாள் இரங்கேசா - சிந்தையால்
உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காமம் இனிது. 121

### கனவுநிலை யுரைததல்

செய்தவஞ்சேர் வாணனது செல்வி கனாநிலையில்
எய்தினான் அன்றோ இரங்கேசா - பைய
நனவினான் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் னுயிர். 122

நல்காதவர் - இன்பந் தராதவர்.

### பொழுதுகண் டிரங்கல்

காக்கும் பதியகலக் காட்டிற் சலர்க்காரி
ஏக்கமுற்றாள் அன்றோ இரங்கேசா - நோக்கில்
பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும். 123

### உறுப்பு நலனழிதல்

மங்கையுமை யோர்பங்கு வாங்கி மகிணன் பால்
இங்கித முற்றாள் இரங்கேசா - செங்கை
முயக்கிடைத் தண்வளி போழப் பயப்புற்ற
பேதை பெருமழைக் கண் 124

முயக்கிடை - தன்னைத் தழுவியபோது.

### நெஞ்சொடு கிளத்தல்

முன்னமிர திக்கு மொழிந்த பதிதந்த
தின்னலம் அன்றோ இரங்கேசா - துன்ன
நினைந்தொன்று சொல்வாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து. 125

### நிறை அழிதல்

பின்னைக் கினியமொழி பேசிவென்ற மாயவன்போல்
என்னைத் தொண்டாளும் இரங்கேசா - முன்னின்ற
பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை. 126

பின்னை - நப்பின்னைப் பிராட்டியாகிய சத்தியபாமை,
பெண்மை - பெண்புத்தி, படை - ஆயுதம்.

### அவர்வயின் விதும்பல்

வஞ்சி உருகுமணி மாமால் வருவழிபார்த்
தெஞ்சுமுளம் போலும் இரங்கேசா - பஞ்சணையிற்
கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகோ டேறுமென் னெஞ்சு. 127

மாமால் - ஶ்ரீகிருஷ்ணன், கோடுகோடு - வழிகள் தோறும்.

அன்பியல்

### குறிப்பறிவுறுத்தல்

செட்டிவள்ளி யம்மைச் சிறுமுறுவல் கண்டுளத்தின்
இட்டம் அறிந்தான் இரங்கேசா - மட்டார்
முகைமொக்குள் உள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு 128

மட்டு - தேன், நகைமொக்குள் - புன்முறுவல்.